Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 200 31-10-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களின் சகல விதமான
அச்சுத் தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821

## மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையை மூடிவிட சுகாதார அமைச்சு உத்தரவு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு; நகருக்கு மேற்காக 5கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் மாந்தீவு தொழுநோயாளர் வைத்திய சாலையில் உள்ள சிங்கள நோயாளர்கள் தம்மை ஹெந்தல தொழுநோயாளர் வைத்திய சாலைக்கு மாற்றுமாறு கோரியதையடுத்தே இவ்வைத்திய சாலையை மூடிவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு நகரை அண்டியிருக்கும் தீவில் இருக்கும் மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை 120 வருடங்களுக்கு முதல் பிரித்தானியா அரசாங்க காலத்தில் இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது தொழுநோயாளர் வைத்தியசாலையாகும்.

இங்கு சிங்கள, தமிழ், முஸ்லீம் நோயாளர்கள் ஆரம்பகாலம் தொடக்கம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

தொழு நோயாளர்கள் வருடக்கணக்கில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது வழக்கமாகும். தற்போது இவ்வைத்தியசாலையில் 13 சிங்கள நோயாளர்களும், 12 தமிழ், முஸ்லீம் நோயாளர்களும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இவர்களில் சிங்கள நோயாளர்கள் மட்டும் தமக்கு பாதுகாப்பு இல்லை என கோரி ஹெந்தல தொழுநோயாளர் வைத்தியசாலைக்கு தம்மை மாற்றுமாறு கோரியதையடுத்து மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையை முற்றாக மூடிவிட்டு அங்கு இராணுவ

8ம் பக்கம் பார்க்க

## மலையக மக்கள் முன்னணித் தலைவர்

# சந்திரசேகரன் நாலாம் மாடியில்

## மலையக பகுதியில் தொடர்ந்தும் பதட்டம்

(கொழும்பு)

ஹட்டன் பிரதேசத்திலுள்ள கினிகத்தேன என்னுமிடத்தில் நேற்றுக் காலை சிங்களக் குண்டர்களால் தமிழர்களுடைய 20 கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பஸ் வண்டிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம் பவங்களினால் 14 பொதுமக்கள் காயமடைந்து நாவலப்பிட்டி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களினால் அங்கு தற்போது பெரும் பதட்டம் நிலவுகின்றது. இதனால் நிலைமையைச் சமாளிக்கும் வகையில நுவரெலியா, தலவாக்கல, லிந்துல, திம்புல்ல, அககரப்பத்தன ஆகிய இடங்களில் நேற்று மாலை 6 மணி தொடக்கம் இன்று மாலை 6 மணி வரை தொடர்ந்து 24 மணித்தியாலங்களுக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.



P.Chandrasekaran

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக் காலை தலவாக்கல நகரில் தமிழ் தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### சிறுவன் காயம்

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திய தொழிலாளர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் போது 13 வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்து ஆபத்தான நிலையில் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

பாராளுமன்ற உறுப்பினர் பெ. சந்திரசேகரனை விடுதலை செய்யக்கோரி மலையக பகுதி எங்கும் ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கலாம் என நம்பப்படுகிறது.

### மக்கள் கிளர்வர்

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி ஒருவரை கைது செய்து தடுத்து வைத்திருப்பது ஜனநாயக விரோத செயலாகும் என்றும், கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரனை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் இல்லையேல் வடக்கு கிழக்கிலும் மக்கள் கிளர்ந்தெழுவதை தவிர்க்க முடியாது என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்வதாக இருந்தால்

8ம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கிளைமோர் குண்டுக்கு மூன்று இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

வவுனியா மகாவத்தை பிரதேசத்தில் நேற்று இரவு விடுதலைப்புலிகளின் கிளைமோர் தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் கொல்லபட்டுள்ளார்கள்.

இராணுவ காவல் நிலைகளுக்கு உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இராணுவ உழவு இயந்திரத்தை இலககு வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வீதியோரம் இக்கிளைமோர் மறைத்து வைக்கப்படிருந்ததாகவும் தெரிவித்துள்ள இராணுவ வட்டாரங்கள் இத்தாக்குதலில் காயமடைந்துள்ள மேலும் இரு இராணுவ வீரர்கள் அனுராதபுரம் பொது வைத்தியா சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளன.

## படுவான்கரையில் ஆர்ப்பாட்டப்பேரணி

(நமது நிருபர்)

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான படுவான் கரைப்பகுதியில் அப்பகுதி பொது அமைப்புக்களினால் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப் பட்டமையை கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்கள், பொது மக்கள், மகளீர் அமைப்புக்கள் மற்றும் இளைஞர்கழகங்கள் கலந்து கொள்ளும் இப்பேரணியில் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமையை கண்டித்து மகஜர் ஒன்றை அரச அதிபர், பிரதேச செயலாளர் ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளுக்கு கையளிக்கவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தாக்குதலில் காயமடைந்த பொலிசை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் மீதும் தாக்குதல்!

(ஏறாவூர் நிருபர்)

வாழைச்சேனைப்பொலிஸ் நிலையம் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பொலநறுவை ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக ஏற்றிச் சென்று கொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டியின் மீது புனாணையில் புலிகள் மீண்டும் நடாத்திய தாக்குதலில் அந்த

8ம் பக்கம் பார்க்க

## கறுவாக்கேணியில் எறிகணை விழுந்த வீட்டில் உறங்கியவர் மாண்டார்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு கறுவாக்கேணியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

இளையதம்பி துரையப்பா (60) என்பவரே பலியானவர் டிலிமா யோகராஜா என்பவர் காய்மடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இவர்கள் உறக்கத்திலிருந்த வேளை எறிகணைகள் விட்டில் விழுந்து வெடித்ததாக்த் தெரிவிக்கப் படுகின்றது. வீடு சேதமடைந்துள்ளது.

## மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமையை கண்டித்து பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

போக்குவரத்துக்கள் யாவும் நடைபெறவில்லை மட்டக்களப்பில் இருந்து புறப்பட்டுச்சென்ற வாகனங்களும் மட்டக்களப்புக்கு வந்த வாகனங்களும் ஆறுமுகத்தான் குடியிருப்பில் வழிமறிக்கப்பட்டு நேற்று மாலை 4 மணிக்கே பிரயாணம் செய்ய அனுமதிக் கப்பட்டன.

அவ்விடத்தில் சில வாகனங்களின் கண்ணாடிகள் சிலரால் உடைக்கப்பட்டன.

ஆறுமுகத்தான் குடியிருப்பு ஏறாவூர்; வந்தாறுமூலை, நாவற்குடா பிரதான வீதிகளில் டயர் போட்டு ஆங்காங்கே எரிக்கப்பட்டது.

காத்தான்குடியில் நேற்று காலையில் கடைகள் திறக்கப் பட்டிருந்த போதிலும் மாலை வேளையில் கடைகள் சில மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

இதேவேளை வந்தாறு மூலையில் வீதிகளில் நின்ற பொதுமக்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு நகர் பகுதியில் உள்ள காரியாலயங்கள், கடைகள் பாடசாலைகள்யாவும் மூடப் பட்டிருந்ததுடன் வீதிகள் வெறிச் சோடியிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## இராணுவ காவலரண் மீது கிளிவெட்டியில் தாக்குதல்

(அனஸ்)

கிளிவெட்டி பாதைக்கு அருகில் உள்ள இராணுவ காவல் அரண் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தின்

8ம் பக்கம் பார்க்க

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


# பின்னையிட்டா தீயா ?

''முன்னையிட்ட தீ முப்புரத்திலே.....
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்....''

இது பட்டினத்தடிகளின் ஒரு பாடலில் வரும் ஈரடிகள்

திசை மாறிச்சென்று புர்ட்சிப்பாதையில் ஆட்சிஅதிகாரத்தை கைப்பற்றுவதற்காக. ஆயுதப்போராட்டத்திலிறங்கிய சிங்கள இளைஞர்களை சீர்திருத்துவதற்காக நாட்டில் சில இடங்களில் புனர் வாழ்வு முகாம்கள் அமைக்கப்பட்டன.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமும் இவற்றுள் ஒன்று. இந்த முகாமில் வைக்கப்பட்டிருந்த சிங்கள இளைஞர்கள் சீர்திருந்தினார்களோ இல்லையோ அதிலிருந்தவர்கள் பின்னர் விடுதலை யாகி உயிருடன் சென்று விட்டனர்.

''தமிழ்ப் பயங்கரவாதிகள் '' என்று அரசும் படையினரும் சிங்கள, ஆங்கிலப்பத்திரிகைகளும் முத்திரை குத்தியிருக்கும் தமிழ் இளைஞர்களில் கைது செய்யப்பட்வர்கள், சரணடைந்தவர்கள் என்று 80 க்கு மேற்பட்டவர்கள் இந்த முகாமில் புனர்வாழ்வு பெறுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

தீப ஒளித்திருநாளாம் தீபாவளித் திருநாளான கடந்த 26ம் திகதி வியாழக்கிழமைக்கு முதல் நாள் ஆயுதந்தாங்கிய பயங்கரவாதக் காடையர் கும்பல் ஒன்று நுழைந்து நிராயுத பாணிகளான அப்பாவித் தமிழ் இளைஞர்களை வெட்டியும், குத்தியும், குதறியும் கோரமாக கொலை செய்ததுடன் மாண்டவர்களை அடையாளம் காணமுடியாத படி முகாமிற்கு தீ வைத்து கொழுத்தியுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் மலைநாட்டில் நுவரெலியா மாவட்டம் சாமி மலையைச் சேர்ந்தவர். குத்திக்குதறப்பட்ட அவரது பூதவுடல்கடந்த சனிக்கிழமை நுவரெலியா மாவட்டம் வட்டகொடைக்கு கொண்டு வரப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மக்கள் ஆறாத்துயருடன் அடக்கம் செய்தனர்.

இத்துயரை வெளிப்படுத்தவும் பரிதாபமாக மரணத்தைத் தழுவிக் கொணட்வர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் நுவரெலியா, தலவாக்கொல்லை ஹட்டன் ஆகிய மலையகத் தோட்டப்பகுதிகளில் கறுப்பு வெள்ளைக் கொடிகளைத் தொங்க விட்டு அமைதியான முறையில் மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

நிலைமை மோசமாகி விடக்கூடாது என்று தடுப்பதற்காக ஊரடங்கு உத்தரவும் சில இடங்களில் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த ஊரடங்கு உத்தரவை மீறி அரசவாகனங்களில் பல இடங்களுக்கும் சென்று கறுப்பு வெள்ளைக் கொடிகளை அறுத்தும் கடைகள் மீது கற்களை வீசியும் சில கும்பல்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதுடன் கலகத்தை தூண்டிவிடுவதிலும் முனைந்தனர். நிலைமை மோசமாகாமல் தடுப்பதற்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்த சமயத்திலும் பயங்கரவாதிகளான காடையர்கள் நாசகாரச் செயல்களில் ஈடுபட்டு தமிழர்களின் கடைகள் பலவற்றை அடித்து நொறுக்கி தீ வைத்து அழித்துள்ளனர்.

பண்டாரவளையில் பயங்கரவாதிகளான சிங்களக்காடையர்கள் வைத்த தீ மலையகத்தின் மற்றைய பகுதிக்கும் பரவிக் கொணடிருந்தது. மலையகத் தமிழ் மக்கள் தங்கள் துயரைக் கூட வெளிப்படுத்த முடியாத நிலையில் அல்லல்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் மக்களின் துயரத்தில் பங்கு கொண்டு அவர்களுக்கு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்ததுடன் அவர்களின் பாதுகாப்பிற்கும் வழிதேடிக் கொண்டிருந்தவர் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன்.

இரண்டு தடவைகள் சிலவருடங்கள் சிறைவாசம் அனுபவித்த சந்திரசேகரன் மற்றும் இலங்கைத் தமிழ் தலைவர்களைப் போலும் குறிப்பாக வடக்கு கிழக்கு தலைவர்களைப் போலும் வெறும் அறிக்கைகளை வீட்டு ஒதுங்கிக் கொள்ளாமல் மக்களுடன் நின்று பிரச்சினைகளை எதிர் கொண்டார். மலையகத் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்து பாதுகாப்பில் பங்கு கொண்டார். .

இப்படிச் செயல்பட்ட சந்திரசேகரன் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். இது நிலமையை
கட்டுப்படுத்துமா? மோசமாக்குமா?

மக்களுக்குப் பாதுகாப்பாகவும் உதவியாகவும் இருக்கும் தலைவர்களை கைது செய்யும் அரசாங்கம் பயங்கரவாதக் காடையர்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்?

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களை மட்டுமல்ல மலைநாட்டிலுள்ள இந்தியவம்சாவழி தோட்டப்பகுதித் தமிழர்களையும் ''பயங்கரவாதிகள்'' என்று ஒழித்துக்கட்டுவதற்கு சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டுள்ளனரா? *

பண்டாரவளையில் இட்ட தீ தமிழ் இனத்துக்கு எதிராக மூட்டப்பட்ட தீயாகவே தோன்றுகிறது.

இனியும் இந்தியா உட்பட சர்வதேச சமூகம் இலங்கைத் தமிழ் சிறுபான்மையினத்தின் நிலைக்கு கவலையும் கண்டனமுந்தான் தெரிவிக்கப்போகிறதா?

# தினக்கதிரின் சாதனைகள்

இன்று தினக்கதிர் இரு நூறாவது இதழைப் பிரசுரிக்க விருக்கிறது. மட்டக்களப்பு மக்கள் அனைவரும் கொடுத்து வைத்த வர்கள் என்றே கூறவேண்டும். ஏனெனில் தினமும் காலை 6 1/2 மணிக்கெல்லாம் நாட்டு, உலக நடப்புக்களை உடன் அறிந்து கொள்ளக்கூடிய நிலையைத் தோற்றுவித்த பெருமை தினக்கதிரையே சாரும்.

சிறந்த வழிநடத்தலுடனும், சிறந்த ஆலோசனையுடனும் ஓர் இளைஞர் குழாத்தையும், அறிவுமிக்க சான்றோர்களையும், கொண்டு செயற்பட்டு வளர்ந்து வரும் தினக்கதிர் எம் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். தினக்கதிர் ஆரம்ப காலத்தில் இருந்த நிலையை மறக்க முடியாது. காரணம் அந்நேரத்தில் தினக்கதிர் தொடர்பாக மக்களிடையே கூடிய விளம்பரம் இன்மையாலும், இன்னும் சில சாரார் மட்டக்களப்பு பத்திரிகை தானே என்று அலட்சியம் செய்தவர்களும், இன்று தினக்கதிர் வரவில் லையா? வந்துவிட்டதா? என்று கேட்பதோடு தினக்கதிரை ஒரு தடவை வாசிக்காவிட்டால் பைத்தியம் பிடிக்கும் என்றும் அவர்கள் கூறும் போது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. ஓர் நேரம் புறக்கணித்தவர் இன்று வரவேற்கின்ற போது சந்தோசமாய் இருப்பதோடு தினக்கதிரின் பலத்தையும் அறிந் துள்ளணர்.

மட்டக்களப்பில் ' விடிவானம் ' பத்திரிகை வாரவெளியீடாய் வெளிவந்ததாயினும் சிறப்பாக அமைந் ததாயினும் சில மக்கள் புறக்கணித்தமையாலோ என்னவோ நின்று விட்டது. அதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும் என நினைக்கிறேன். ஆனால் தினக்கதிர் இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்து இன்று தலைநிமிர்ந்து நிற்பது பெருமைக் குரிய விடயமாகும். இவற்றை விட தினம் தினம் வெளிவரும் பத்திரிகை எனும் போது போற்றுதலுக் குரியதே.

கடந்த நான்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் தினக்கதிர்


ஹெலி விபத்தில் பலி!
க்கம்: பிரார்த்தனை.
ள்ளிரவு நடந்தது
ர் முன்னாள்
கட்சி வேட்பாளர் கொலை
திர்
காமில் 25 து
ர் படுகொலை
யுதம் தாங்கிய சிங்க
வைத்து அழித்து அ
சடலங்களை எரித்தனர்

விற்பனை செய்யும் கடைகளில் எத்தனை மணிக்கு சென்றாலும் தினக்கதிரை வாங்க முடியும். ஆனால் தற்போது காலை 10 மணிக்கு தினக்கதிரை வாங்கா விட்டால் அதன் பின் தினக்கதிரை பார்க்க முடியாது. விரைவாக விற்பனையாகிவிடும். அந்தளவிற்கு தினக்கதிரை மக்கள் வரவேற் கின்றார்கள் எனும் போது மகிழ்ச்சி யாயுள்ளது.

தினக்கதிரின் வெளியீடு பற்றிக் கூறும் போது முதலில் ஆசிரியரின் தலையங்கம் மூலம் பத்திரிகையின் தரத்தினை அறிந்து கொள்ளலாம். சிறப்பான கருத்துக்கள் எளிதில் விளங்கக்கூடிய முறையில் எழுதப்படும். ஆசிரியர் தலையங்கம் சிறப்பு வாய்ந்ததாகும். செய்திகளைப் பொருத்தமட்டில் தேசிய பத்திரிகையில் வெளியாகும் செய்திகளை விட விரிவாகவும், விரைவாகவும் பிரசுரிக்கப்படுவதோடு மட்டக்களப்பில் எங்கு எது நடந்தாலும் அறியக்கூடிய ஓர் சாதனம் தினக்கதிர் தான் என்பது மிகையாகாது. அது போன்றே உலகச் செய்திகள் அனைத்தும் தினக்கதிர் உலக வலயத்தில் வெளி வந்த பின்பே ஏனைய பத்திரிகைகளில் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது. கவிதை எழுதுவோரைத் தூண்டக்கூடிய பகுதி ' கவிதாதேசம் ' மூலம் எமது மக்களின் கவி உணர்வை வளர்க்க உதவி புரிகிறது. சிறுகதை சிறுவர் பகுதி என்பனவும்

**ச.கணேசதாஸ் ஆரையம்பதி**

தரம் வாய்ந்ததாக அமைந்திருப் பதில் வியப்பில்லை. ஏனெனில் தினக்கதிரே தரம் வாய்ந்தது என் றால் மற்றவற்றைக் கேட்கவா வேண்டும். அடுத்து தினக்கதிரின் முக்கிய பகுதி வாசகர் நெஞ்சம். இப் பகுதியால் பல சமூகக்குறை பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளது. அத் தோடு தினக்கதிர் வாசகர் நெஞ்சம் பகுதியில் வெளியான 24 மணித்தி யாலயத்திற்கிடையில் பல சமூக சீர்கேடுகள் தடுக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டமையும் தினக் கதிர் படைத்த சாதனை என்றே

(4ம் பக்கம் பார்க்க)

# இன்றைய நிலையில் ஹர்தால்கள் தேவைதானா?

(ஆரையூர்மைந்தன்)

தற்போது எதற்கெடுத்தாலும் ஹர்தால், ஹர்தால் என்று மக்கள் வாயில் இருந்து பரவப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. வாய்மொழி மூலமே கூடுதலாக இக் ஹர்தால் செய்தி மக்கள் மத்தியில் பரப்பப்படுவதால் யார்? எதற்கு? இக் ஹர்தாலை அமுல்படுத்துகின்றனர் என்ற செய்தி கூட மக்கள் மத்தியில் திருப்தியை ஏற்படுத்துவதில்லை. அண்மையில் மட்டக்களப்பில் விசாக் தினத்தில் இடம் பெற்ற பூரண ஹர்தால் அனுஷ்டிக்க வேண்டும் என்று துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளதைத் தொடர்ந்து ஹர்தாலும் பூரணமாக அனுஷ்டிக்கப் பட்டது. சில பகுதிகள் மறுநாட்களே வழமைக்கு திரும்பியது. ஆனால் ஆரையம்பதி போன்ற சில இடங்களில் மக்கள் வழமைக் குத்திரும்புவதற்கும் கடைகள், சந்தைகள் திறப்பதற்கும் ஐந்து நாட்கள் சென்றன. காரணம் ஹர்தால் தினத்தன்று திறக்காத எந்தக்கடைகளும் மறு அறிவித்தல் வரை திறக்கக்கூடாது என்று ஆரையம்பதி விசேட அதிரடிப்படை யினரால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பு கொண்டதை அடுத்து ஐந்து தினங்களுக்குப் பின்னரே மீண்டும் வர்த்தக நிலையங்கள் வழமைக்குத் திரும்பின.

மேற் கொள்ளப்பட்ட ஹர்தாலை விடுதலைப் புலிகளாலே அறிவிக்கப்பட்டது என்ற நோக்கத் தினாலோ என்னவோ படையினரும் மிகவும் கடுமையாக இருந்து விட்ட னர். மக்கள் யாருடைய சொல்லைக் கேட்பது என்று நிலைதடுமமாறிக் கொண்டிருக்கின்றனர்: ஒருவர் பூட்டு என்றதும், மற்றவர் திற என்பதும் மக்களை தர்மசங்கடங்களுக்குள் தள்ளி விட்டது. இதுபோன்று காத்தான்குடியில் இடம் பெற்ற படுகொலை, ஏறாவூரில் இடம் பெற்ற படுகொலை, புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற படுகொலை, கிழக்குப்பல்கலைக்கழகம், சத்துருக்கொண்டான் இராணுவ முகாமில் இடம் பெற்ற படுகொலை களின் நினைவு தினத்தன்றும் இக் ஹாத்தால் துண்டுப்பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டது. இதனால் அவ்வவ் தினங்களில் குறிப்பிட்ட இடங்கள் மக்களின்றி மயான அமைதி நிலவியதை யாவரும் அறிவர். இக் ஹர்த்தால் உண்மை யிலேயே தேவைதானா? என்பது பற்றி எல்லோரும் சிந்திக்க வேண் டும். இன்று எத்தனையோ குடும் பங்கள் அன்றாடம் கூலித்தொழில் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். அக் குடும்பத்தலைவன் அல்லது குடும்பத்தில் கூலித்தொழில் செய் யும் வேறுயாராவது ஹர்த்தால் தினத் தன்று வேலையின்றி வீட்டிலேயே முடங்கிக்கிடக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் அக்குடும்பம் சில

(4ம் பக்கம் பார்க்க)

# "பாதகப்படுகொலைகளை கண்டிப்பதுடன் தமிழர் நாகரிக வாழ்வு வாழவும் வேண்டும்"

(சென்னை)

பண்டாரவளை படுகொலைகளை இந்தியாவும் உலக நாடுகளும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலர் வைகோ, பாமக நிறுவனர் ராமதாஸ், திராவிடர் கழகச் செயலர் வீரமணி ஆகியோர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டத்தில் இந்தியா சார்பில் பங்கேற்ற வைகோ நேற்று அதிகாலை சென்னை திரும்பினார். சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஐக்கிய நாடுகள் கூட்டத்தில், தமிழீழத் தமிழர்கள் படும் துயரங்களை உலக நாடுகள் உணரும் வகையில் உரையாற்றினேன் என்று சொன்னார்.

சிறீலங்காவின் பண்டாரவளையில் தமிழீழத் தமிழர்கள் 29 பேர் கோரமாக கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த படுகொலை குறித்து சிறீலங்கா அரசை மத்திய அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று அவர் மேலும் சொன்னார்.

திராவிடர் கழகப் பொதுச் செயலர் வீரமணி சென்னையில் வெளியிட்ட அறிக்கையில், சிறீலங்கா அரசின் இத்தகைய வன்முறை வெறியாட்டங்களால் தமிழர்களுக்கு எப்படி நீதி வழங்க முடியும்? சிறிலங்காவின் கோரச் செயலை இந்திய அரசும் அரசியல் கட்சிகளும் கண்டனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ விடுதலை அணி பொதுச்செயலர் ஈழவேந்தன் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில், பண்டாரவளை தடுப்பு முகாமில் நிராயுதபாணித் தமிழர்கள் கோரமாக கொல்லப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

## பாலஸ்தீனர்களும் ஈழத்தமிழர்களும்

சிங்கள கொலையாளிகளுடன் ஈழத்தமிழர்கள் எந்த காலத்திலும் கூடி வாழ முடியவே முடியாது. பாலஸ்தீனியர்கள் இழந்த நாட்டை மீட்க போராடுகிறார்கள். ஈழத் தமிழர்கள் இருக்கும் நாட்டை காப்பாற்ற போரிடுகிறார்கள். அண்டைநாடான இந்தியா பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவு அளிப்பதை வரவேற்கிறோம். ஈழத் தமிழர்களுக்கும் ஆதரவு அளிக்க இந்திய மக்களையும் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் மேலும் கூறினார். பாமக தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:

சந்திரிகா அரசு, எல்லா மனித உரிமைகளையும், சர்வதேச விதிமுறைகளையும் மீறி செயல்படுகிறது. இலங்கை தமிழர்கள் பாதுகாப்புடன் வாழ இந்திய மத்திய அரசு வழிகாட்ட வேண்டும்.

29 தமிழர்களை கண்டம் துண்டமாக வெட்டி கொலை செய்த நிகழ்ச்சியை பாமக வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த புனர்வாழ்வு மையத்தில் இருந்த அனைவருமே அப்பாவி தமிழ் இளைஞர்கள்.

இலங்கை அரசு காரணமின்றி இவர்களை கைது செய்து இந்த புனர்வாழ்வு மையத்தில் அடைத்து வைத்திருந்தது. இதை அறிந்த சிங்கள வெறியர்கள் கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் இந்த அப்பாவி தமிழர்களை மிகக் கொடூரமான முறையில் கொன்று குவித்திருக்கின்றனர். இது சிங்களர்களின் வெறியாட்டத்தின் உச்சக் கட்டமாக அமைந்துள்ளது.

இலங்கையை ஆண்ட பரம்பரையான தமிழர்களை, சிங்களவர்கள் காலம் காலமாக பாரபட்சமாக நடத்தி அவர்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்தி வருகின்றனர். தற்பொழுது தமிழர்களை பூண்டோடு அழித்து விட கொக்கரிக்கிறார்கள். இதற்கு அங்குள்ள மதகுருமார்களும், இலங்கை அரசும் உடந்தையாக இருந்து வந்திருக்கின்றன.

## தமிழர்களை எப்படி பாதுகாக்க முடியும்

புனர்வாழ்வு மையம் என்பது அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனம். அந்த அரசு நிறுவனத்தில் வாழ்ந்த 29 பேரை கொன்றிருக்கிறார்கள் என்றால், இலங்கை அரசே அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறது என்று தானே அர்த்தம். தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலையைத் தானே இது காட்டுகிறது.

ஒரு புறம் அமைதிப் பேச்சு, ஒப்பந்தம், சுயாட்சி என்று பேசும் சந்திரிகா அரசு, மறுபுறம் உலகத்தில் எங்கும் நிகழாத வண்ணம் அப்பாவி தமிழ் மக்களை மிருகத்தை வேட்டையாடுவது போல கொன்று குவிக்கிறது.

இந்தப் படுகொலை எல்லா மனித உரிமைகளையும், சர்வதேச விதிகளையும் மீறிய செயல். சட்டத்தை மதிக்கத் தவறிய சந்திரிகா அரசு, சிங்கள வெறியர்களிடம் இருந்து தமிழர்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுக்க இருக்கிறது.

இந்தியாவும், மற்ற அமைதி விரும்பும் நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும், மனித உரிமை கழகங்களும் இந்த மகா பாதகப் படுகொலையை கண்டிப்பதோடு இலங்கை தமிழர்களை பாதுகாத்து ஒரு நாகரீக வாழ்வு வாழ வழிவகுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி தனது அறிக்கையில் ராமதாஸ் கோரியுள்ளார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

# இந்தியாவும் உலக நாடுகளும் கண்டிக்க வேண்டும்.

பழநெடுமாறன்

பண்டாரவளை தடுப்பு முகாமில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு சந்திரிகா அரசுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இப்படி தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ. நெடுமாறன் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வலியுறுத்தினார்.

ஜெயவர்த்தனாவாக இருந்தாலும், சந்திரிகாவாக இருந்தாலும் தமிழர்களுக்கு, வெளியிலும் பாதுகாப்பில்லை. சிறையிலும் பாதுகாப்பில்லை. சிறைக்காவலர்கள், காவல் துறையினர், இராணுவத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன்தான் பண்டாரவளை படுகொலை நடந்துள்ளது. இந்த நடவடிக்கையை இந்திய அரசும், உலக நாடுகளும் கண்டிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்

# 2002 வரை பாகிஸ்தானில் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை:

## இராணுவம் திட்டவட்ட அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பொது தேர்தல் நடத்தவோ, பிரதமரை நியமிக்கும் எண்ணமோ சர்வாதிகாரி முஷாரப்புக்கு இல்லை யென்று மூத்த ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானில் ராணுவம் ஆட்சியை பிடித்து ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இது பற்றி தளபதி முஷாரப் குறிப்பிடுகையில் விலைவாசி உயர்ந்து வருவதால் தம் மீது பாகிஸ்தான் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும், ஆனால் பாகிஸ்தானின் பொருளாதாரத்தை சீரமைக்க தமக்கு கடுமையான முடிவுகளை எடுப்பது தவிர வேறு வழி தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார். தம்மால் இதனை தீர்க்க முடியவில்லையென்றால் பாகிஸ்தானை ஆள்வதற்கு புதியவரை தாம் கொண்டுவரப்போவதாக முஷாரப் குறிப்பிட்டதாக பாகிஸ்தான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் இந்த செய்தியினை மூத்த ராணுவ தளபதியும், முஷாரப்பின் நெருங்கிய நண்பருமான பிரிகேடியர் ரஷித் குரேசி மறுத்திருக்கிறார். பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தும் எண்ணமோ, பிரதமரை நியமிக்கும் எண்ணமோ முஷாரப் பிற்கு துளியும் இல்லை என தெரிவித்தார். ராணுவ அதிகாரிகள் கூட்டத்தில் இது குறித்து விவாதம் நடத்தவில்லை என்று தெரிவித்தார். 2002 வரை பாகிஸ் தானில் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார். இதுகுறித்து பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவறானவை என்றார்.

# வங்கதேசத்தில் கடும் புயல். 20 பேர் பலியானார்கள்

(டாக்கா)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட குறைந்த அழுத்த தாழ்வு மண்டலத்தால் வங்க தேசத்தில் கடுமையான புயல் ஏற்பட்டது. புயலின் தாக்குதலுக்கு இதுவரை 20 பேர் பலியாகியுள்ளார்கள். 100-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

வங்காள விரிகுடா கடலில் கடந்த சில நாட்களுக்கு முன் குறைந்த அழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியது. இதனால் வங்க தேசத்தில் கடுமையாக புயல் ஏற்பட்டது. மணிக்கு 100 கி.மீட்டர் வேகத்தில் பலமான காற்று வீசியது. தலைநகர் டாக்கா உட்பட பல பகுதிகளில் கடுமையான மழை பெய்தது.

கடுமையான மழை மற்றும் புயலின் காரணமாக 20 பேர் பலியாகியுள்ளார்கள். 100-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரையோர பகுதிகளில் வாழும் மீனவர்கள் 100 பேரை காணவில்லை என்றும் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 20 மீனவர்கள் கரை வந்து சேரவில்லை எனறும் வங்க தேசத்திலிருந்து வெளிவரும் செய்திக் குறிப்புகள் தெரிவித்துள்ளன.

புயலினால் ஏற்பட்ட நிலச் சரிவினாலும், கட்டிட இடிபாடுகளிலும் சிக்கியதால் அந்த 20 பேர் இறந்திருக்கலாம் என அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கடற்கரையோர பகுதிகளான பிரிசால், பதுஅசாலி, பர்கூனா மற்றும் அவற்றை சுற்றியுள்ள மாவட்டங்களின் மரங்கள் பெயர்ந்து விழுந்ததாலும், மின்சாரக் கசிவினாலும் பலர் இறந்திருக்கலாம் என்றும், 200-க்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாகவும் அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந் நிலையில் புயலின் வேகம் குறைந்ததால் பாதுகாப்புப் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளின் மதிப்பு இன்னும் கணக்கிடப்படவில்லை என

# அமைதிப் பேச்சுக்கு தயார்: இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

(டெல்அவிவ்)

வன்முறை கைவிடப் பட்டால் அமைதிப் பேச்சுவார்த்தையை அமெரிக்காவில் நடத்த தாம் தயாராக இருப்பதாக இஸ்ரேல் அமைச்சகத்தின் உதவியாளர் ஹிராலால் பாலா தெரிவித்துள்ளார்.

புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்புப் படையினர் தீவிரமான மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரேல் பிரதமர் ஈத் பராக் தற்போது அறிவித்துள்ளார்.

இஸ்ரேலிய துருப்புக்களுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் இடையே இதுவரை நடந்த மோதலில் சுமீபத்தில் 145 பேர் கொல்லப்பட்டார்கள். அமைதிப் பேச்சும் முறிந்து போனது. இதனால் ஆத்திரமடைந்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாஸீர் அரபாத் 'நரகத்திற்கே போ' என்று இஸ்ரேல் பிரதமருக்கு சாபம் விட்டது நினைவிருக்கலாம்.

# உள்வாரியாக கற்கை நெறியை தொடர்வோருக்கு ஆசிரியர் நியமனம் இல்லை

(ஓட்டமாவடி நிருபர்)

இவ்வருடம் ஜுலை மாதம் முதல் வழங்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு க.பொ.த.(உ/த) புள்ளி அடிப்படையில் தகுதி காண் ஆசிரியர்களாக நியமனம் (1999) வழங்கப்பட்டோர் களில் பெரும்பாலானோரின் நியமனங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கல்வி, கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சின் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பா ளரினால் ஒப்பமிட்டு அனுப்பட்டுள்ள **8/1/02/01/** (24) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இந்த நியமனம் இரத்துச் செய்தல் நடைமுறைப்படுத்தப்டுகிறது.

இக் கடித்ததில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தாங்கள் பல்கலைக்கழக / கல்வியியற் கல்லூரிகளில் உள்வாரியாக கல்வி நடவடிக்கையை மேற்கொள் வதால் கல்வி உயர் கல்வி அமைச்சின் **4/Mep/121/99** ஆம் இலக்க 04.08.1999 ஆம் திகதி சுற்று நிருபத்திற்கமைய உள்வாரியாக பல்கலைக்கழங்களிலோ. கல்வி யியற் கல்லூரிகளிலோ கற்கை நெறியினைத் தொடர்வோருக்கு மேற்படி தகுதிகாண் ஆசிரியர் நியமனம் வழங்க முடியாது என்பதற்கமைய, தங்களின் பல்கலைக்கழக / கல்வியியற் கல்லூரி துணைவேந்தர்/ பீடாதிபதியிடமிருந்து தங்களது அனுமதியை இரத்து செய்த கடித்தினைப் பெற்று 25.09.2000 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட திகதிக்கு முன் தங்களது பதிவு இரத்துச் செய்யப்பட்ட கடிதம் அனுப்பிவைக்கப்படாததால் தங்க ளுக்கு வழங்கப்பட்ட ஆசிரிய நியமனம் உடன் இரத்துச் செய்யப்படுவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# நன்னீர் மீன் வளர்ப்புப் பற்றிய கருத்தரங்கு

(அருள் சசி)

நன்னீர் மீன் வளர்ப்புப்பற்றிய கருத்தரங்கு 28.10.2000 அன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கே.உதயகுமார் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் கெளரவ அதிதியாக இலங்கை - கனடா அபிவிருத்தி நிதிய இணைப்பாளர் சொர்ணலிங்கம் கலந்து கொண்டார். இவருடன் மட்டக்களப்பு மாவட்ட நன்னீர் மீன் வளர்ப்பு விரிவாக்கல் உத்தியோகஸ்தர்களும் வருகை தந்துள்ளனர். பிரதேச செயலாளர் இங்கு பேசுகையில் எமது பகுதி இளைஞர் யுவதிகளுக்கு பண்ணெடுங்காலமாக பீடித்துள்ள இந்த வேலையற்ற பிரச்சனைய ஓரள்வு நிவிர்த்தி செய்யலாம். எமது பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் கல்வி கற்ற இளைஞர் யுவதிகள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வேலைக்கு அமர்த்துவதால் பிரதேசம் முன்னேறும் எனவும் பற்பல கருத்துக்களைக் கூறினார்.

அபிவிருத்தி நிதி இணைப்பாளர் பேசுகையில் எமது திட்டமானது கஷ்டக்கிராமங்களை விருத்தி செய்யும் நோக்கம் கொண்டது. எமது திட்டத்திற்கு முதுகு எலும்புகள் இந்த இளைஞர் யுவதிகளே என்று திட்டவட்டமாக கூறுவேன் என்றார்.

இக் கருத்தரங்கு சுமார் 3 மணிநேரம் இடம் பெற்றது. நூற்றுக் கணக்கான இளைஞர் யுவதிகள் இதில் பங்கு பற்றினர்.

# புனைப் பெயருக்குத் தடை!

(ஏறாவூர் நிருபர்)

கல்விச்சேவையிலுள்ள பதவி நிலை உத்தியோகத் தர்கள் உத்தியோகபூர்வ அலுவல்களின் போது சொந்தப் பெயர் அல்லாத புனை பெயர்களை உபயோ கிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

உத்தியோக பூர்வ அலுவல்களின் போது பதவி முத்திரைகளில் புனை பெயர் உபயோகிக்கப்படுவது தொடர்பாக தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை அடுத்து வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இது தொடர்பான சுற்று நிருபத்தை அனுப்பியுள்ளது.

தாபன கோவை ஏற்பாடுகளின்படி உத்தியோகஸ்தர்கள் ஒருவர் புனை பெயர் பாவிப்பது சட்ட விரோதமானது என தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய நிலை.......

சந்தர்ப்பங்களில் பட்டினியால் இருக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இன்னும் எத்தனையோ முக்கிய விடயங்களை இக் ஹர்த்தால் தடைப்படுத்துகின்றது என்பது உண்மை. இதனால் பாதிப்படைவது நிச்சயமாகப் பொதுமக்களே. படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்கள் பட்டினியாலும் பாதிக்கப்படக் கூடிய சூழ் நிலை இக் ஹர்த்தால் மூலம் ஏற்படுத்துகின்றது. மக்கள் சாதாரண சூழ்நிலையில் அன்றாடம் வாழும் போது திடீர் என ஹர்த்தால் என்றால மக்கள் என்ன செய்வார்கள். ஹர்த்தால் போடுவதால் நன்மையும் இல்லை என்றே கூறலாம். எதன் நினைவாக, அல்லது எந்த செயல் தொடர்பாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றதோ அதை மீண்டும் வராமல் தடுப்பதற்கு பொது மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி அதை எதிர்ப்பதன் மூலம் செய்யலாம். வெள்ளம் வரும் முன்னே அணை கட்ட வேண்டும் என்பதற்கினங்க செயற்பட வேண்டும்.

எவ்வாறாயினும் இக் ஹர்த்தால்களால் பாதிக்கப்படுவது பொது மக்களே என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய சூழ் நிலையில் வடக்கு கிழக்கு மக்கள் பல்வேறு இன்னல்களை தினம் தினம் அனுபவித்து வருகின்றனர். எம் மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும், அச்சத்தையும், குழப்பமான சூழ் நிலையையும் ஏற்படுத்தும் ஹர்த்தாலை குறைப்பதன் மூலம் மக்கள் மத்தியில் ஓர் இயல்பான நடைமுறையினைக் காணக்கூடியதாக அமையும் என்பது திண்ணம்.

# கோரளைப்பற்று - ஏறாவூர் பற்று பிரதேச மீனவர் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியம்

(புஸ்பராசா)

மேற்படி பிரதேசங்களின் ஒன்றியம் அமைத்தல் பொதுக் கூட்டம் 21.10.2000 அன்று மாவட்ட கூட்டுறவு பரிசோதகர் திரு.பூபாலப்பிள்ளை-நந்தகுமார் அவர்களின் தலைமையில் கரடியனாறு கமநல அமைப்பு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு இடம் பெற்றது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் நிருவாக தெரிவு இடம் பெற்றது. தலைவர் திரு.செல்லத்தம்பி-செல்வராசா, உபதலைவர் திருமதி சுலோஜனா உதயகுமார், செயலாளர் திரு சின்னத்தம்பி வேலாயுதம், பொருளாளர் திரு முருகுப்பிள்ளை-மயில்வாகனம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக குமாரசுவாமி முத்துலிங்கம், இராசையா சிவனேசம், வினாயகம் கிருபைரெத்திம் போன்றோர் ஏகமனதாக தெரிவாகினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கடற்றொழில் பரிசோதகர் திரு.தம்பிப்போடி அமிர்தலிங்கம் அவர்கள் ஏறாவூர்பற்று சார்பாகவும், கடற்றொழில் பரிசோதகர் திரு கந்தையா தவபாலன் வாழைச்சேனை சார்பாகவும் கலந்து சிறப்பித்தனர்.

# எறிகணைத் தாக்குதலை நிறுத்த பொலிசாருக்கு உத்தரவிடுங்கள்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல் நடாத்துவதை நிறுத்த பொலிஸாருக்கு உத்தரவிடுமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா பதில் பொலிஸ் மா அதிபர் ரீ.ஈ.ஆனந்த ராஜாவை நேரடியாகச் சந்தித்துக் கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பத்து நாட்களுக்குள் ஏழு இடங்களில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களில் பொதுமக்கள் இரண்டுபேர் கொல்லப்பட்டுள்ளதோடு பத்துப் பேர் காயமடைந்தனர்.

20.10.2000 அன்று ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி மற்றும் ஐயங்கேணி ஆகிய இடங்களில் இடம்பெற்ற மோட்டார் தாககுதலினால் மூன்று பேர் காயமடைந்தனர்.

21.10.2000 இல் கல்லடியில் இடம்பெற்ற சம்பவத்தில் இரண்டுபேர் காயமடைந்தனர்.

27.10.2000 இல் களுவாஞ்சிகுடி மோதலில் குடும்பப் பெண்ணொருவர் பலியானார். இருவர் காயமடைந்தனர்.

28.10.2000 செங்கலடி மற்றும் கொம்மாதுறையில் இரண்டுபேர் காயமடைந்தனர். 29.10.2000 கறுவாக்கேணியில் வயோதிபர் பலியானதுடன் பெண்ணொருவர் காயமடைந்த சம்பவத்தினையும் மௌலானா எம்.பி.சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கு முன்னரும் இது போன்ற பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதன்போது பல வீடுகள் சேதமடைந்துள்ளன. இவ்வாறான நிலையினால் மக்கள் இரவு வேளைகளில் பாதுகாப்பான இடம் நோக்கி பெயர்ந்து உறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டுள்ளார்.

இத்தகைய தாக்குதல் களினால் சேதமடைந்த வீடுகளுக்கும் மற்றும் பாதிக்கப் பட்டவர்களுக்கும் நஷடஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான சிபாரிசினை பாதுகாப்புத் தரப்பினர் வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கல்முனையில் ஹக்கீமுக்கு வரவேற்பு

(நமது நிருபர்)

எஸ்.எல்.எம்.சியின் தேசியத் ஐக்கிய தலைவரும் ஸ்தாபகருமான மர்ஹூம்எம.எச்.எம்.அஸ்றப் மறைவுக்கு பின்னர் எஸ்.எல்.எம். சியின் இணைத்தலைவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அமைச்சர் றவூப் ஹக்கீமுக்கு வரவேற்பொன்றை நடாத்த கல்முனையில் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

# ஹக்கீமை தேசிய தலைவராக்க கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்ப காலந் தொட்டு தலைவரின் மரணம் வரை தேசியத் தலைவர் என்ற பதவி அடிப்படையில் வழிநடத்தப்பட்டு வந்தது.

சிறிலங்கா முஸ்லிம் காங்ரஸின் தேசியத் தலைவராக றவூப் ஹக்கீமை நியமிக்கும் படி எங்களது அஸ்றப் நற்புறவு அமையம் கட்சியின் அரசியல் அதியுயர் பீடத்தை கேட்டுக் கொள்கிறது. என்று அமையத்தின் செயலாளர் எம்.எம்.தௌபீக் அமீன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

# வன்னியில் நடந்த கண்டனப் பேரணி

(வவுனியா)

பண்டாரவளை படுகொலையைக் கண்டித்து. சனிக்கிழமை வன்னியில் மாபெரும் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.

மல்லாவியிலும் புதுக்குடியிருப்பிலும் நடத்தப்பட்ட பேரணிகளில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர். மல்லாவியில் இடம் பெற்ற பேரணியானது முதலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மல்லாவி பணிமனையை சென்றடைந்து அதன் தலைமைச் செயலகத்திற்கான மனு அங்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பேரணி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்த்தானிகராலயத்தின் மல்லாவி வெளிக்கள பணிமனையை அடைந்தது. அங்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு மகஜர் ஒப்படைக் கப்பட்டது. இதேபோன்று புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற கண்டனப் பேரணி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உப பணிமனையை சென்றடைந்தது. அங்கு அதன் தலைமையகத்திற்கான மகஜர் கையளிக்கப் பட்டது. பின்னர் முல்லை அரச செயலகத்தை பேரணி சென்றடைந்து. திரு கொபி அனான் மற்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவுக்குமான மகஜர்கள் அங்கு கையளிக்கப்பட்டன.

# பெலியத்தையில் 15 லட்சம் கொள்ளை

(நமது நிருபர்)

பெலியத்தையில் இனம் தெரியாத துப்பாக்கி நபர்கள் 15 லட்சம் ரூபாயை நேற்று கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

பெலியத்த மக்கள் வங்கி கிளையில் வைப்புச் செய்வதற்காக இந்தப்பணம் கொண்டுவரப்பட்ட சமயம் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த சம்பவம் பற்றி பெலியத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணைகளை நடத்தி வருகின்றார்.இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

# தினக்கதிர்.....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கூற வேண்டும். வீதிப் புனரமைப்பு, வீதிகளில் மின் விளக்குகள் இன்மை, மற்றும் பல்வேறு குறைபாடுகள் இப்பகுதியில் பிரசுரிப்பதால் அக்குறைபாடுகள் தொடர்பாக உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க தினக்கதிர் பங்களிப்புச் செய்வதும் அது கண்டுள்ள வெற்றியாகும். விளையாட்டுச் செய்தியும் அவ்வாறே. அதுபோன்று தினக் கதிரில் வெளியாகும் கேலிச்சித்திரமும் மக்களைச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றது.

தினக்கதிரில் கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது தேர்தல் களம் எனும் பகுதியை ஆரம்பித்து தேர்தல் பற்றிய எல்லோருடைய கருத்துக்களையும் பிரசுரித்து மக்கள் மத்தியில் அரசியல் நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ள கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திய பெருமை தினக்கதிரையே சாரும். அது போன்று தேர்தல் காலத்தில் தினக்கதிரின் பங்களிப்பு அளப பரியது. தேர்தல் முடிவுகளை. மிகவும் விரைவாக வெளியிட்ட சாதனை மட்டுநகர் தினக்கதிரையே சாரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. வடக்குக் கிழக்கில் இடம் பெறும் யுத்த நிலைமைகளை உண்மையான செய்திகளாய் தரும் பெருமையும் தினக்கதிரையே சாரும். குறைந்த விலையில் கூடிய செய்திகளைத் தரவல்ல தினக்கதிர் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும். கிழக்கு மாகாண மக்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய பத்திரிகை மட்டுமன்றி போற்றக் கூடிய பத்திரிகையுமாகும். எனவே தினக்கதிர் மேலும் பல சாதனைகளைப்படைத்து, சிறப்பாக சேவை செய்ய எமது மனப்பூர்வமான பாராட்டுக்களோடு, நல்வாழ்த்துக்களும்.

நன்றி

# நீ பேசும் உண்மைக்கு உன் உயிரே விலை

# சாப்பிடவும் பல் துலக்கவும் மட்டுமே வாயைத்திற

## போர்க்கால நிலைமை கூறும் யதார்த்தம்

யாழில் போர்க்கால வழக்குமொழிகள் சில உண்டு. அவைகளில் ஒன்று ' நீ பேசும் உண்மைக்கு உன் உயிரே விலை ' இன்னுமொன்றுண்டு. ' நீ பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டுமானால் பல் துலக்குவதற்கும், சாப்பிடுவதற்கும் உனது வாயைத் திற 'என்பதாகும். நீண்ட 17 வருட யுத்த காலங்களில் துப்பாக்கியின் நிழலில் வாழும் மக்கள் உண்மைகளல்லாதவைகளை பேசவே பழகிக்கொண்டார்கள். ஆனால் நிமலராஜன் வித்தியாசமானவர். இவர் உலகில் அதி பயங்கரமான இடங்களில் ஒன்றான ஓர் இடத்தைப்பற்றி உலகிற்கு தெரியப்படுத்தி வந்தார். துப்பாக்கிக் கலாசாரத்தால் அடக்கி ஆளும் சக்தியுடைய ஓர் நிலப்பரப்பில் மக்கள் எவ்வாறு ஆயுதாரிகளால் சதா தொந்தரவு சித்திரைவதைகளையும் அனுபவிக்கின்றனர் என அவதானித்தார். இவர்களில் சிலர் தாங்கள் வன்முறைகளை கைவிட்டு ஜனநாயக அரங்கிற்கு திரும்பி விட்டதாக உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால் அவர்கள் தங்களது துப்பாக்கிகளை இன்னும் கைவிடவில்லை. அதற்கான காரணம் தங்களை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக எனக் கூறுகின்றனர். அவர்களுக்கு கொழும்பிலுள்ள அரசாங்கத்தினதும், யாழ்ப்பாணப்படைத்தரப்பினதும், ஆசிர்வாதங்கள் உடைத்தாயிருக்கின்றன. அவர்களது துப்பாக்கிகள் அதிகமாக அவர்களைப் பாதுகாப்பதைப் பார்க்கிலும் நிராயுதபாணிகளான மக்களை பயமுறுத்தி தங்களுக்கு சாதகமான விடயங்களில் சம்மதிக்கச் செய்யவே பயன்பட்டன. இவ் அரசாங்கமும், இராணுவமும் இவைகளைப்பற்றி முற்றாக அறிந்திருந்தும் இதனைத் தடுக்க குறிப்பிடும் படியாக எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஒரு வேளை அவர்கள் நினைத்திருப்பார்கள். இவ்வழிகளில் தமிழ் மக்களின் இதயங்களை வெற்றிகொண்டு விடலாம் என்று இவர்கள் இன்னும் தமிழ் மக்களைப் பற்றி முற்றாக அறியவில்லை.

சுதந்திரமானதும் நீதியானதும் என்ற போர்வையில் யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தலில் இடம் பெற்ற மோசடிகளின் உண்மைத்தன்மையை வெளிச்சமிட்டுக்காட்டினார் நிமலராஜன். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இந்த கோழைத்தனமான குற்றத்திற்குப் பல வழிகளில் காரணமாயுள்ளது. அரசாங்கம் விசாரணை நடத்துவதாக வாக்குறுதியளித்துள்ளது. இவ் விசாரணை பாராபட்சமற்ற முறையில் நடக்கும் என நம்புவோம். இதிலிருந்து அரசுதீச் செயல்களுக்கு ஆதரவு காட்டி

**நோர்வே விவசாயப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்: சண்முகரட்ணம்.**

சகிக்க முடியாத ஆயுத கலாச்சாரத்திற்கு உதவி செய்ததாக குற்றம் வெளிப்படும். முன்னாள் ஆயுதக் குழுக்கள் தங்களது உத்தியோக பூர்வமான அறிக்கையில் இலங்கையில் பல விந்தைகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளன. பின்பு ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு விட்டு தங்களுக்கு ஆயுதங்களை தரிக்க அளிக்கப்பட்ட விசேட அனுமதிகளால் ஓர் தீர்வினை யுத்த கீர்த்தியைத் தாங்கி வட கிழக்கு விசேடமான இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் களிக்கூத்தாடுகிறார்கள். சக பத்திரிகையாளர்களை தங்கள் தோழனின் நல்லடக்கத்திற்கு கூட கொழும்பிலிருந்து செல்ல விடாமல் அரசாங்கம் அனுமதிக்கவில்லை.இது ஒரு கொடூரமான தவறாக இருந்தது. நிமலராஜன் இனங்களுக்கிடையிலான பாலமாக இருந்தார். இலங்கையின் அனைத்து சமூகங்களும் உண்மையான செய்திகள் கிடைக்க ஆதரவு வழங்கின. நான் எனது இலங்கைத் தோழர்களுடன், சர்வதேச சமூகத்துடன் இணைந்து ஒரு தைரியமிக்க பின்பற்றத்தக்க ஊடகவியலாளனின் கொலையை கண்டனம் செய்கிறேன்.

# மக்களின் உயிர் வாழ்வைப் பாதுகாப்பது ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கடமை

**மட்டு,திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிராயுதபாணிகளான தமிழ் இளைஞர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருப்பது மிகுந்த அதிர்ச்சியையும் துயரத்தையும் தருகின்றது.

குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படாத சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் மீது அதுவும் புனர்வாழ்வு கிடைக்கும் என்று நம்பிக்கையோடு காத்திருந்த அப்பாவிகளான இளைஞர்கள் மீது நடத்தப்பட்டுள்ள குரூரமான இப்படுகொலைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

பாதுகாப்புப் படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் உள் ஒரு முகாமில் நடைபெற்றுள்ள இக்கொலைகள் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவிப்பதோடு தமிழ் மக்களின் பாதுகாப்பையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

கடந்த காலங்களிலும் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பில் உள்ள முகாம்களில் சிறைச்சாலைகளில் இது போன்ற படுகொலை இடம்பெற்றுள்ளன. தற்போது தமிழ் இந்துச் சகோதரர்கள் தீபாவளிப் பெருவிழாவைக் கொண்டாடுகின்ற ஒரு புனிதமான சூழ்நிலையில் நடைபெற்றுள்ள மூர்க்கத்தனமான இக்கொலைகள் திட்டமிட்ட செயலென்றே நாம் ஐயப்பட வேண்டியுள்ளது.

மக்களின் உயிர் உடைமைகளை பாதுகாப்பது அதிலும் அரசின் நேரடிப் பொறுப்பில் உள்ளவர்களின் உயிர் வாழ்வைப் பாதுகாப்பது ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். ஆகவே காலந்தாழ்த்தாது அரசாங்கம் நீதியான விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கண்டறிவதோடு வருங்காலத்தில் இது போன்ற படுகொலைகள் நடைபெறாது உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

# 141 சமுர்த்தித் திட்டங்களில் 91 திட்டங்கள் பூர்த்தி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட 141 திட்டங்கள் செப்டம்பர் இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இரா.நெடுங்செழியன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட 98 இலட்சத்து 63 ஆயிரத்து 250 ரூபாவில் 45 இலட்சத்து 78 ஆயிரத்து 176 ரூபா இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வவுணதீவு,பட்டிப்பளை மற்றும் ஏறாவூர்ப் பற்று ஆகிய பகுதிகளில் சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் வெல்லாவெளியில் 25சதவீதமான வேலைகளும் வாகரை ஏறாவூர் நகர் மற்றும் காத்தான்குடி ஆகிய இடங்களில் சுமார் 40 சதவீதமான பணிகளும் வாழைச்சேனையில் 70 வீத நடவடிக்கைகளும் மண்முனை வடக்கில் 75 வீத வேலைகளும் ஆரையம்பதி மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களில் 90 சதவீதமான பணிகளும் பூர்த்தியடைந்துள்ளன.

# மட்டக்களப்பு கோட்டைமுனை சுற்றிவளைப்புத் தேடுதல்

நமது நிருபர்)

மட்டக்களப்பு கோட்டைமுனைப் பகுதி நேற்று முன்தினம் அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது.

காலை 5.00 மணியிலிருந்து முற்பகல் 9.00 மணிவரை இந்தத் தேடுதல் நடாத்தப்பட்டது. பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இந்த தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

சந்தேகத்தின் பேரில் பலர் விசாரிக்கப்பட்டனர். எனினும் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை. இதேவேளை மட்டக்களப்பு பொதுச்சந்தைக்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி சந்தைப்படுத்தல் திட்டத்தில் நான்கு கிராமிய சந்தைகள்

(ஏறாவூர் நிருபர் )

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி சந்தைப்படுத்தல் திட்டத்தின் கீழ் இதுவரை நான்கு கிராமிய சந்தைகள் நிருமாணிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

ஒருலட்சத்து நாற்பதினாயிரம் ரூபா இதற்கென செலவிடப்பட்டுள்ளது.

ஏறாவூர் பற்றுப் பிரதேசத்தில் இரண்டு சந்தைகளும் களுவாஞ்சிக்குடி மற்றும் பட்டிப்பளை ஆகிய இடங்களில் ஒவ்வொரு சந்தையும் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை ஏறாவூர் பற்று களுவாஞ்சிகுடி, பட்டிப்பளை மற்றும் வவுணதீவு ஆகிய பிரதேசங்களில் மேலும் எட்டு கிராமிய சந்தைகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கு ஆறு இலட்சத்து 26 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 கிராமிய சந்தைகள் நிறுவுவதற்கு 79 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் எட்டு சந்தைகள் அமைப்பதற்கு இதுவரை அனுமதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலை கந்தசஷ்டி விழா

( அரியம் )

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த கந்தர் சஷ்டி விரதம் கடந்த 28ம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் மூன்றாம் தேதி வெள்ளிக்கிழமை நிறைவுறும்.

சூரன் போர் விழா இரண்டாம் தேதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறவுள்ளது. சஷ்டி திதி எதிர் வரும் 01.11.2000 ம் திகதி புதன்கிழமை மாலை 6.31 மணிக்கு ஆரம்பமாகி அடுத்த நாள் 02.11.2000 வியாழன் இரவு 9.00 மணிக்கு நிறைவுறும்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இவ்வருடம் இரண்டாயிரம் அடியார்கள் கந்தர்சஷ்டி விரதம் அனுஷ்டித்ததுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொது எழுதுவினைஞர் சேவை போட்டிப்பரீட்சை கொழும்பில் பரீட்சாத்திகள் விசனம்

(ரவீந்திரன்)

பொது எழுதுவினைஞர் சேவையில் அதிசிறப்பு வகுப்பிற்கு நியமிக்கப்படுவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 4ம்,5ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறுவதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சாத்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 500க்கு மேற்பட்ட பரீட்சாத்திகள் கொழும்பு சென்று பரீட்சை எழுதுவதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இப்பரீட்சையை ஒத்திவைக்குமாறு அல்லது மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு கிழக்கு மாகாணத்தில் பொருத்தமான பரீட்சை நிலையத்தில் பரீட்சையை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இந் நிலையை சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்திற்கு கொண்டு வருவதாக அரசாங்க பொது எழுதுவினைஞர் சங்கத்தின் உறுப்பினரும் மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருமான ப.சிவலிங்கம் தெரிவித்தார்.

## சென் ஜோன் அம்பியுலன்ஸின் முதலுதவிப் பயிற்சி நெறி

( ஒலுவில் நிருபர் )

சென் ஜோன் அம்பியுலன்ஸின் மேற்படி முதலுதவிப் பயிற்சி நெறி ஒன்று எதிர்வரும் 2000.10.28ம் திகதி அட்டாளைச்சேனை - பாலமுனை கிராமிய தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கபடுகின்றது.

சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரம் நடைபெறும் இப்பயிற்சி நெறிக்காக இப்பயியற்சி நிலையத்தின் பயிலுனர்கள அனைவரும் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கின்றார்கள்.

பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறும் மாணவர்களுக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் அடையாள அட்டையும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ நிலைகள் மீது புலிகள் எறிகணைத் தாக்குதல், சண்டை தீவிரம்

(வவுனியா நிருபர்)

தென்மராட்சி, எழுதுமட்டுவாள் கொடிகாமம் பகுதிகளை நோக்கி விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள்- 4 படையணியினர் எறிகணைத்தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

மற்றும் நாகர்கோயில் படை நிலைகள் மீதும் எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதேவேளை மடுவில் கிழக்கிற்கு மேற்கே உள்ள புலிகளின் பிரதேசத்தை நோக்கி இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சண்டையில் உயிரிழந்தோரின் விபரங்கள் வெளியாகவில்லை. ஆனால் 3 படையினரின் சடலங்கள் மந்தகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக உறுதிப் படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பிரதேசத்தில் சண்டை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

# "இரு இன இளைஞர்களும் பலியாகும் யுத்தத்தை நிறுத்த வேண்டும்"

## ஆனந்தசங்கரி

(கொழும்பு)

யுத்தம் காரணமாக தமிழ் இள்ளைஞர்களும் சிங்கள இளைஞர்களும் பலியாகின்றனர். எனவே யுத்தத்தை நிறுத்தி உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்துவதே இன்றையு தேவையாகும் என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவருமான வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்று இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் ஒலிபரப்பப்படும் நாள் மலர் அரங்கம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யுத்தம் காரணமாக தமிழ் சிங்கள இளைஞர்கள் பலியாகின்றனர். எனவே யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை எற்படுத்துவதுதான். இன்றைய முக்கிய தேவையாகும் என்றார்.

அரசாங்கத்தினரும், எதிர் கட்சியினரும் தமது பிள்ளைகளை இழந்திருக்கும் கிராம மக்கள் பால் தமது பரிவுணர்வைக் காட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் எதிர்கட்சியினர் ஆணைக் குழுக்களை அமைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். சோல்பரிக் காலத்தில் இருந்து பல குழுக்கள் இயங்கி வருகின்றன. மேற்கு நாடுகளில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. எனவே தேர்தல் மோசடிகளை குறைக்க தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப் பட வேண்டும் எனக் கூறினார்.

இவற்றைவிட இன்று இனப்பிரச்சினை தீர்வுதான் முக்கிய பிரச்சினையாகவிருக்கிறது. மூன்றாவது நாட்டு மத்தியஸ் தத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி யுத்தத்திற்கு முடிவு காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஒரு நல்ல ஆட்சி நிலவும் போது புத்திசாலிகள் அதற்கு ஆதரவு வழங்குவார்கள் எனவும் கூறினார்.

எந்த ஒரு சமயமும் யுத்தத்தை நடத்த வேண்டும் எனக் கூறவில்லை. பௌத்த சமயமும் இதற்கு விதிவிலக்கல்ல.

எனவே ஏனைய விடயங்களில் கருத்தொற்றுமை காண்பதற்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வு காண்பதற்கு சகல தரப்பினரும் ஒன்றுபட்டு தீர்வுகாண வேண்டும் எனத் தெரிவித்தார்.

போருடன் தொடர்புடைய விடயங்களை தவிர அரசாங்கம் மேற்கொள்ளும் மற்றைய சகல நல்ல விடயங்களுக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்தார்.-

# அநாகரீக கொலை வெறியாட்டத்தை எதிர்த்து அணி திரளவேண்டும்

## புதியஜனநாயக கட்சி வேண்டுகோள்

"இலங்கையின் பேரினவாத வெறிகொண்ட சக்திகள் மீண்டும் ஒரு கொலைக்களத்தை பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் நடாத்தி தமது காட்டுமிராண்டித் தனத்தை உலகின் முன்காட்டியுள்ளது. இப்பாதகச் செயலை எத்தகைய கும்பல் செய்திருப்பினும் அதற் கான முழுப்பொறுப்பையும் பேரின வாத பேச்சுக்களை ஆவேசமாக பேசிவந்த அரசாங்கத் தலைவர் களும், ஐக்கியதேசியக் கட்சி, சிஹல உறுமய போன்றவற்றின் பேரினவாதிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ் அநாகரீகக் கொலை வெறியாட்டத்தை எமது புதிய ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் மனித நேயத்தையும் மனித உரிமைகளையும் ஜனநாய கத்தையும் நேசிக்கும் அனைத்து சக்திகளும் இது போன்ற படு கொலைகளை எதிர்த்து அணிதிரள வேண்டும் என வற்புறுத்துகிறது.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் பண்டாரவளை புனர்வாழ்வு நிலைய படுகொலை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். பண்டாரவளை பிந்துனுவெல புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வுக்குரிய பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த தமிழ் இளைஞர்கள் மீது திட்டமிட்ட கொலை வெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 25 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டடுள்ளனர். மேலும் 23 இளைஞர்கள் படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் உள்ளனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளனர். இக்கொலைத் தாக்குதல் அனைத்து மக்களையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இப்படு கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டிருக்க முடியாது. இச்சம்பவத்திற்குப் பின்னால் திட்டமிடப்பட்டுள்ள பேரினவாதக் கரங்கள் செயல்பட்டிருப்பதாகவே உணர முடிகிறது. தேர்தலுக்கு பின் தொடரும் இரண்டாவது படுகொலைச் சம்பவமாக இருப்பது தமிழ் மக்களையும் இளைஞர்களையும் அச்சம் கொள்ள வைத்துள்ளது.

அன்று 1983ன் வெலிக் கடைச்சிறைச்சாலைப் படுகொலைகளும் பின் நிகழ்ந்த சிறைச்சாலை. தடுப்பு முகாம் படுகொலைக்கும் உரியவாறு பகிரங்க விசாரணைக் குழுக்கள் மூலம் விசாரணை நடாத்தப்பட்டு அதன் குற்றவாளிகள் நீதி விசாரணை மூலம் தண்டிக்கப்பட்டிருந்தால் தற்போதைய கொலைவெறித் தாண்டவம் தடுக்கப்பட்டிருக்கும். பேரினவாத கொலைவெறியாட்டச் சம்பவங்கள் ஆளும் தரப்பினால் தொடர்ந்தும் மூடிமறைக்கப்பட்டு வரும் போக்கினால் வெலிக்கடை, களுத்துறை, பண்டாரவளை மட்டுமின்றி மேலும் பல கொலைச்சம்பவங்கள் பெருகவே செய்யும். இவ் அபாயத்தைத் தடுத்து நிறுத்த இன்றைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தயக்கம் இன்றி முன்வருமா? அல்லது முன்னைய சம்பவங்களில் காட்டி வந்த அலட்சியப் போக்கைத் தொடருமா? என்பதே கேள்விக்குறியாகும். எனவே இடம் பெற்ற பண்டாரவளைப் படுகொலைச் சம்பவத்திற்கான விசாரணையைப் பக்கச்சார்பற்ற பகிரங்க ஆணைக்குழுவை நியமித்து உண்மையான குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். என்பதே எமது கட்சியின் வேண்டுகோளாகும்.

# விகிதாசாரப்படி எமக்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்

## ரவூப் ஹக்கீம்

(ஏறாவூர் நிருபர்)

தேசிய ஐக்கிய முன்னணியின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையினாலேயே பிரதியமைச்சருக்கான நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்தினை அமைச்சர் றவூப் ஹக்கீம் மறுத்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியினால் தேசிய ஐக்கிய முன்னணிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு தாம்கோரி வருவதாக அவர் மேலும் கூறினார்.

116 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசில் 44 அமைச்சர்கள் மற்றும் 44பிரதியமைச்சர்களும் இடம்பெறுகின்றனர். தேசிய ஐக்கிய முன்னணியின் 11 உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்துள்ளனர். இதனால் விகிதாசாரத்திற்கு ஏற்ப தேசிய ஐக்கிய முன்னணிக்கு 8 பதவிகள் வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் றவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

எமது வலியுறுத்தலின் பிரகாரம் தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்கத் தயார் என்றும் அமைச்சர் றவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இந்த வாரம் உங்கள் பலன்

## (28. 10. 2000 - 03. 11. 2000)

சோதிடர் கே.ஸ்ரீ.இளங்கோகரன்

**மேடம்:-**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம்கால்)

கவலை கஷ்டங்கள் நீங்கும். புகழ்சேரும் கல்வி தொழில் இலாபம் பணவரவு சகலவழிகளிலும் விருத்தியாகும். கணவன் மனைவி காதலர் உறவுகள் பொறுப்புணர்வோடு சிறந்து விளங்கும். உறவினர்கள் வீட்டிற்கு வருவார்கள். எதிர்பாராத விதத்தில் பிரயாணம் கைகூடும்.

அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்

**இடபம்:-**(கார்த்திகை 2,3,4ம் கால். ரோகினி; மிருகசீரிடம் 1,2ம் கால்)

மனம் சோர்வடையும் எடுத்த காரியங்கள் எண்ணியபடி கைகூடாது. கல்வி தொழில் முன்னேற்றம் அடையும். இலாபம் பணவரவு குன்றவடையும். கணவன் மனைவி உறவுகள் சிறந்து விளங்கும். காதலர்க ளுக்கிடையே வாக்கு கலகம் உண்டாகும். திருமணம் தடைப்படும்.

அதிர்ஷ்ட நாள்:-திங்கள், செவ்வாய்

**மிதுனம்:-**(மிருகசீரிடம்3,4ம் கால் திருவாதிரை புநர்பூசம் 1,2,3ம் கால்)

மனதிலே வீண்கவலை கள் குடிகொள்ளும். கல்வி, தொழில் இலாபம் பணவரவு வீழ்ச்சியடையும். குழந்தைகளால் துன்பமுண்டாகும். காதலர் களுக்கிடையே மோதல்களேற்படும். விவசாயிகள் பல வழிகளிலும் இலாபமடைவர். எதிர்பாராத பண உதவி கிடைக்கும். பொருள் சேரும்.

அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்

**கடகம்:-**(புநர்பூசம் 4ம்கால், பூசம், ஆயிலியம்)

மனத்தைரியம் நம்பிக்கையுண்டாகும். கல்வி தொழில், இலாபம், பணவரவு நன்மை தரும். கணவன் மனைவி காதலர் உறவுகள் சிறப்பாக அமையும். திருமணங்கள் கைகூடும். விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்பூமிசேரும் தூரதேசப் பயணம் கைகூடும்.

அதிர்ஷ்டநாள்:- வியாழன், சனி

**சிங்கம்:-**(மகம் பூரம், உத்தரம் 1ம்கால்)

தீவிர முயற்சிக்கேற்ற பலன் கிடைக்கும். கல்வி, தொழில், இலாபம், பணவரவு நல்லநிலையில் இருக்கும். கணவன், மனைவி, காதலர், உறவுகளில் பூரண அமைதி நிலவும். வீட்டிற்கு உறவினர் வருகை தருவார்கள்: கடிதத் தொடர்பு கிடைக்கும். திருமணம் கைகூடவாய்ப்புண்டு.

அதிர்ஷ்டநாள்- வெள்ளி, ஞாயிறு

**கன்னி:-**(உத்தரம் 2,3,4ம்கால், அத்தம், சித்திரை 1,2ம்கால்)

மனம் குழப்பமடையும் எடுத்த காரியங்கள் தடைப்படும். கல்வி, தொழில், இலாபம். பணவரவு பாதிப்பின்றியிருக்கும். கணவன். மனைவி, காதலர் அசௌகரீகங்களை எதிர் நோக்குவர். கடிதத்தொடர்பு கிடைக்கும். வெளிநாட்டுப்பயணம் கைக்கூடும். அரசாங்க வில்லங்கம். நேரலாம். அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- செவ்வாய், புதன்

**துலா:-**(சித்திரை 3,4ம் கால், சுவாதி, விசாகம் 1,2,3ம்கால்)

தேகம் சுகமடையும். காரியங்கள் சித்தியாகும். கல்வி, தொழில். இலாபம், பணவரவு மனத்தென்பு தரும். கணவன் மனைவி காதலர் உறவுகள் பாதிப்படையும். திருமணப் பேச்சுகள் ஒப்பந்தமாகும். தூரதேசப் பயணங்கள் கடிதத் தொடர்புகள் கைசேரக்கூடும். எதிர்பாராத பணச் செலவுண்டு.

அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி

**விருச்சிகம்:-**(விசாகம் 4ம் கால், அனுஷம் கேட்டை)

ஆர்வம் உண்டாகும். உதவி கிடைக்கும் கீல்வி, தொழில், இலாபம். பணவரவு பாதிப்பின்றி இருக்கும். கணவன், மனைவி, காதலர், உறவுகள் சிறந்து விளங்கும். பூமி பொன். பொருள் சேரும். விவசாயிகளுக்கு நன்மை உண்டாகும். புதிய தொழில் சேரவாய்ப்புண்டு. வியாபாரிகள் பண நஷ்டத்தை எதிர்நோக்குவர்.

அதிர்ஷ்டநாள்:-திங்கள், செவ்வாய்

**தனு:-**(மூலம், பூராடம், உத்தராடம் 1ம்கால்)

பொறுப்புணர்ச்சி ஆர்வம் ஏற்படும் காரியங்கள் கைகூடும் நட்பு பெருகும். கல்வி, தொழில், பணவரவு, நன்மையாக இருக்கும். இலாபம் குறைவடையும். வீண் செலவுகளேற்படும். கணவன் மனைவி காதலர் உறவுகள் களங்கமின்றிருக்கும். திருமணம் கைகூடலாம்.

அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்

**மகரம்:-**(உத்தராடம் 2,3,4ம்கால் திருவோணம், அவிட்டம்1,2ம் கால்)

மனப்பூரிப்பு உண்டாகும். கௌரவம் புகழ் சேரும். கல்வி, தொழில், இலாபம், பணவரவு சிறப்பாக அமையும். கணவன், மனைவி, காதலர், உறவுகளில் பதட்டம் நிலவும். புதிய தொழில் சேரும் கெட்ட மனிதர்களால் தீமைகள் உண்டாகலாம். அவதானம்.

அதிர்ஷ்டநாள்- சனி, ஞாயிறு

**கும்பம்:-**(அவிட்டம் 3,4ம்கால், சதயம். பூரட்டாதி 1,2,3ம் கால்)

முயற்சிக்கு தகுந்த முன்னேற்றம் கிடைக்கும். கல்வி, தொழில், இலாபம், பணவரவு மந்தநிலையில் இருக்கும். கண்வன்மனைவி காதலர்களிடத்திலே கலக்கம் உண்டாகும் திருமணவிசயங்கள் இழுபறி நிலையில் இருக்கும். புகழ் சேரும். பண உதவி கிட்டும். பிரயாணங்கள் கைகூடும்.

அதிர்ஷ்டநாள்:- புதன்

**மீனம்:-**(பூரட்டாதி 4ம்கால் உத்தரட்டாதி, ரேவதி)

முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். சகல காரியங்களையும் பக்தி முத்தியோடு செய்து வெற்றி பெறுவீர். கல்வி, தொழில், இலாபம், பணவரவு சுமாராக இருக்கும். கணவன், மனைவி. காதலர்,உறவுகள் பாதிப்படையும். திருமணம்பிரயாணம் தடைப்படலாம் அவதானம்

அதிர்ஷ்ட நாள்- வியாழன், வெள்ளி




# இலங்கை வீரர்களின் திறமையை ஏற்கனவே அறிந்து சொன்ன ஸ்ரீகாந்த்

இலங்கையின் ஒவ்வொரு துடுப்பாட்ட வீரரும் தமது பணியை செவ்வனே செய்கின்றனர்.

சார்ஜாவில் நடைபெற்று வரும் முக்கோண கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொள்ளும் சிம்பாவேக்கு எதிராக ஆடுவதில் இலங்கை அணிக்கு எதுவித பிரச்சினையுமிருக்காது. இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார். இந்திய அணியின் முன்னாள் தலைவரும் அதிரடி ஆட்டக்காரருமான கிருஸ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தெரிவாளர்கள் இளம் வீரர்களைப் பொருத்தமான இடத்திற்குப் பொருத்தமான நேரத்திற்கும் தெரிவு செய்வதில் திறமைசாலிகள் என்பது மறக்க முடியாத உண்மை

ஆட்டத்தை எடுத்துக் கொண்டால் இலங்கை ஆட்டத்தை எடுத்துக் கொண்டால் இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான மாவன் அத்தபத்து மீண்டும் தான் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை நிரூபித்து வருகின்றார்.

இளம் வீரரான குமாரசங்ககார உறுதியான துடுப்பாட்ட வீரர் ரசல், ஆர்னல்ட் இருவரும் எத்தகைய பந்து வீச்சுக்களையும் எதிர்த்து ஆடக் கூடிய வல்லமை பெற்றவர்கள். இறுதி ஓவர்களில் ஆட்டங்கள் குவித்து சராசரி எண்ணிக்கையை உயர்த்துவதில் களுவிதாரண வல்லவர் என ஸ்ரீகாந்த் - இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

# பிறந்த திகதி தரும்யோகம்.

## ஜோதிடம் - யூன்- 09

யூன் மாதம் 9,18,27ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:

**எண் 9** அதன் அதிபன் செவ்வாய் யூன் 9ம் தேதி பிறந்தவர்கள் சுக்கிரன் ஆதிக்கத்தையும் 18,27ம் தேதிகளில் பிறந்தவர்க்ள் புதன் ஆதிக்கமும் பெற்றவர்கள். அறிவாற்றல் உடையவர்கள். ஆனால் எதையும் விவாதம் செய்யும் குணம் கொண்டவர்கள். மனம் திறந்து பேசுவதால் பல மறைமுக எதிரிகளையும் சம்பாதிப்பவர்கள். கெமிஸ்ரி, கணிதம்,மெக்கானிசம் இவற்றில் ஆர்வமும் அவைகளில் உயர்கல்வியும் பெற்று அத்துறையில் பணியும் அமைதியும் எதிலும் அதிக கவனம் செலுத்தி கற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். தங்களது எழுத்தும் மிகவும் வெளிப்படையாகவே அமைவதால் பலரின் விமர்சனத்துக்குள்ளாகும் நிலையும் ஏற்படும்

குடும்பத்தில் உடன் பிறப்புக்கள், மற்றவர்களிடம் உள்ள உறவுகள் பாதிக்கப்படும். அன்றாட வேலையை அன்றாடம் செய்யாதவர்களே அதனால் பலரது கண்டனத்துக்கு ஆளாவீர்கள். மிகவும் தைரியசாலிகள். தோல்விகளைக்கண்டு துவண்டு விடாமல் தோல்வியே வெற்றியின் முதற்படி என்று மீண்டும் போட்டிக்கு தயாராகும் குணமுடையவர்கள். பெண்களுடன் தொடர்பும் அதிகம் இருக்கும். அவர்களால் பல தொல்லைகளும் ஏற்படும். பெண்களானால் காதல் விவகாரத்தில் சில தொல்லைகளையும் அனுபவிக்க நேரிடும். அதனால் ஆண்களுடன் பழகும் பொழுது கவனமாகப் பழக வேண்டும். (அவரும் நம்மை நேசிக்கிறாரா உண்மையான காதலா என்று அறிந்து பழகுதல் நன்மை தரும்)

உங்களின் முன்கோபத்தால் அவசரத்தால் வழக்கு வம்புகளில் ஈடுபடும் நிலையும் அதனால் கோட்டுக்குச் செல்லும் நிலையும் ஏற்படும். செல்வ நிலையில் ஏற்ற இறக்க முள்ளதாகவே அமையும். எதையும் நிதானமாக அவசரக் கோபமில்லாது திட்டமிட்டு செயல்பட்டால் திட்டங்கள் தொழில்கள் வெற்றியும் இலாபமும் தரும். ஏன் எதற்கு என்று அனைத்தையும் ஆராயும் குணமுடையவர்கள். இதை உங்களுடைய கூட்டாளிகள் ஓப்புக்கொள்ள மாட்டார்கள். அதனால் கூட்டுத்தொழிலும் பாதிக்கும். அத்தோடு நல்ல உயர் திட்டங்களும் தோல்வியைத் தழுவும் நிலையும் ஏற்படும். கூட்டாளிகளுடன் அனுசரித்துப் போவதால் பல நன்மைகளைப் பெறலாம்.

பலவிபத்துக்களைச் சந்திக்கும் நிலை ஏற்படும். பிரயாணத்தில் வாகனம் செலுத்தும் போது கவனம் மிகவும் தேவை. தண்ணீரிலும் கண்டம் உள்ளது.5-9-14-18-23-27ம் திகதிகள் எந்த ஆண்டு எந்தமாதமானாலும் நன்மைதரும்.

உங்களது வாழ்க்கையில்5-9-14-18-23-27-32-36-41-50-54-59-63-68-72ம் வயதுகளில் நினைவில் நிற்கக் கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

5-9-14-18-23-27 திகதிகளில் பிறந்தவர்களின் உறவு என்றும் நிலைக்கும். வாழ்க்கைத் துணைவர்களின் பிறந்த திகதியும் இவைகளில் ஒன்றாக அமையுமானால் இணைபிரியாத தம்பதிகள் எனப்பெயர் பெறுவார்கள்.

**வர்ணம் :-** இவர்களுக்கு ஏற்றவர்ணம்சிவப்பு கருஞ் சிவப்பு, நீலமும் கூட பொருந்தும்.


**இரத்தினம்:-** பவளம்(coral) சுண்ணாம்புச்சத்து (carbonate of line)கலந்துள்ளது. ஒப்படர்த்தி2.6, கடினத்தன்மை 3முதல் 4வரை உள்ளது. இக்கல்லை அணிவதால் ரததக்கொதிப்பு, ஜீரணமின்மை, உடலவளர்ச்சியின்மை, வேர்த்தல் ரத்தமூலம் குஷ்டம் குடல்புண் விக்கல் ரத்த சூலை கொடிய சுரம் சிறுநீர்கடுப்பு மாலைக்கண் மாதவிலக்கு தாமதம் ரத்தப்புற்று நோய் போன்ற வைகளை நீக்கி ஆரோக்கியத் தையும் நீண்ட ஆயுளையும் அதிர்ஷ்டத்தையும் தரும்.

**வே.தவராசா**

## முரளிதரனுக்கு 10 ஆயிரம் டொலர்

சாஜாவில் " கொக்கோ கோலா" கிண்ணத்தை இலங்கை வென்றது நாம் அறிந்ததே

இந்தப் போட்டியில் இந்தியஅணி. படுதோல்வியைத் தழுவிக் கொண்டது.இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்த முத்தையா முரளிதரனுக்கு 10 ஆயிரம் டொலர் வழங்கப்பட்டது.




## ஒரே ஒருவர்



தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மட்/ கல்லடி விநாயகர் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய அறுவரில் குருகுலசிங்கம் காயனா மட்டுமே சித்தி பெற்றுள்ளார். இவர் பெற்ற புள்ளிகள் -147

(தகவல்: வெல்லாவெளி நிருபர்)

# வாசகர் நெஞ்சம்

## ஆரையம்பதியா? ஆரயம்பதியா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 100 வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்டதும், கல்வி, கலை, விளையாட்டு போன்றவற்றில் வேகமாக முன்னேறிக் கொண்டு வருவதும் ஆரையம்பதிப் பிரதேசமாகும். இது இப்படியிருக்க ஆரையம்பதிக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் அரசாங்க பேரூந்துகள், மற்றும் தனியார் வாகனங்க ள் போன்றவற்றில் பெயர்ப்பலகைகளில் "ஆரயம்பதி" என்றே எழுதப்பட்டிருக்கிறது. தனியார் வாகன நடத்துனர்கள் , சாரதிகள் போன்றவர்களில் ஆரையம்பதியைச் சேர்ந்தவர்களே அதிகமாக உள்ளனர். இதைவிடவும் அரசாங்க, தனியார் திணைக்களங்களில் வேலை பார்ப்பவர்களிலும் கணிசமானவர்கள் ஆரையம்பதியைச் சேர்ந்தவர்களே.

ஆகவே ஊர்ப்பெயரைக் கொச்சைப்படுத்தி எழுதியிருக்கும் பெயர்ப்பலகைகளில் 'ஆரையம்பதி' என்று எழுதவைப்பதற்கு எவருமே முன்வரவில்லையே!

ஆரயம்பதி எப்போது ஆரையம்பதி ஆகுமோ?

*ம.தயாபரன்*
*ஆரையம்பதி*

## தினக்கதிருக்கு வாழ்த்துக்கள்

கிழக்கிலிருந்து வெளிவரும் முதல் தினசரியாகிய தினக்கதிர் பத்திரிகைக்கு எனது பாராட்டும் நல்வாழ்த்தும் உரித்தாகுக.

கிழக்கு மாகாணத்தில் தலைநகராகி மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் ஒரு சிறந்த தரமான பத்திரிகை தினக்கதிர்.

இதுவரை காலமும் இங்கெ ஒரு தமிழ் தினசரி வெளிவராமலிருந்த குறையை தினக்கதிர் நிறைவு செய்திருக்கிறது. மிக்க மகிழ்ச்சி.

மேலும் சுடச்சுட நல்ல செய்திகளையும், கருத்துமிக்க கதை, கட்டுரை, கவிதைகளையும் பிரசுரித்து எம்மை மகிழ்விக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

*இ.தவராசா*
*தம்பிலுவில்*

## வைத்தியர் இல்லாத வைத்தியசாலை

அண்மையில் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இளைஞர் சுந்தரலிங்கம் சுதாகரன்(20) பாம்பு தீண்டி மரணமடைந்துள்ளார். இவர் எதிர்வரும் மாத முற்பகுதியல் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்வதற்கு ஏற்பாடாகியிருந்த வேளையிலேயே இப்படி பரிதாபமாக இறந்தனர்.

படுவான்கரைப் பகுதி மக்கள் அனுபவிக்கும் துயர அகராதியில் இதுவும் ஒரு சிறு குறிப்புத்தான். இப்பிரதேசத்திற்கென மகிழடித்தீவில் மருத்துவ கட்டிட வசதிகளும், வைத்தியர்களுக்கான விடுதி வசதிகளும் இருந்தும் கூட அங்கே தங்கியிருந்து பணியாற்ற வைத்தியர்கள் இன்மையாலேயே இத்துயரமான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விசயத்தில் கவனமெடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்

*ஜெயமோகன்*
*சோலையூர்*

# சர்வதேச அரங்கில் இலங்கைக்கு விளையாட்டுத் துறையில் நல்ல பெயர் ஏற்பட்டு வருகிறது

சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் பெற்று இலங்கைக்கு பெருமை தேடிக் கொடுத்த சுசந்திகா ஜெயசிங்கவுக்கு விளையாட்டுத் துறை அமைச்சு அவரது வருங்கால விளையாட்டு முன்னேற்றத்துக்காக அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும்.

மேற்கண்டவாறு உல்லாச பயணத்துறை விளையாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். அமைச்சர் வருங்காலத்திட்டங்கள் பற்றி மேலும் தெரிவிக்கையில் சர்வதேச அரங்கில் விளையாட்டுத்துறையில் இலங்கைக்கு நல்ல பெயர் ஏற்பட்டு வருகிறது. இதை மேலும் சிறந்த முறையில் விருத்தி செய்வதற்கு

**அமைச்சர் கிரியல்ல**

திட்டமிட்டுள்ளேன். கிராமப்புறங்களில் திறமை வாய்ந்த வீரர்களும் வீராங்கணைகளும் இலை மறை காய் போல் இருக்கின்றார்கள். இவர்களை நாம் முதலில் இனம் காண வேண்டும். இன்று சர்வதேச அரங்கில் புகழ்பெற்று விளங்கும் சுசந்திக்கா ஜயசிங்க, இலங்கை கிரிக்கட் அணியின் தலைவர் சனத் ஜெயசூரிய ஆகிய இருவரும் கிராமத்தில் இருந்து தான் உருவானவர்கள். விளையாட்டுத் துறையில் நாம் மற்றைய சாடுகளுக்கு சமமான நிலையில் திகழும் காலம் விரைவில் உருவாகிவிடும் என்று குறிப்பிட்டார்.

# பதட்ட நிலையைத் தணிப்பதே இப்போதைய உடனடித் தேவை

(கொழும்பு)

**தற்போது மலையகப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைத் தளர்த்த வேண்டியது அரசினதும் சமூக அமைப்புக்களினதும் அவசரக் கடமையாகும் என கொழும்பில் பத்து அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பண்டாரவளைப் படுகொலைகளை அடுத்து மலைநாட்டுப் பகுதிகளில் நிலைமைகள் கடுமையாக சீர்கெட்டுள்ளன. இந்நிலைமை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவாது தடுக்கப்பட வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைகளால் மக்கள் பாதிக்கப்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் என நாம் அரசை குறிப்பாக கேட்டுக்கொள்ளுகின்றோம் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

1. தற்போது பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனை உடனடியாக விடுதலை செய்யுமாறு அரசு உத்தரவிட வேண்டும்.

2. பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் தொடர்பாக ஓர் திறந்த விசாரணை நடாத்தி அது தொடர்பான விபரங்களை அடுத்த சில தினங்களுக்குள் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

கோபமூட்டக் கூடிய அறிக்கைகளையோ அல்லது நடவடிக்கைகளையோ சமுதாயத்தில் அதிகரித்து நாட்டில் கெடுபிடி நிலை அதிகரிப்பதை தடுக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகள் ஊடகங்கள் சமுதாய அமைப்புக்கள் ஆகியவற்றிற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா மன்னார் மாவட்டங்களிலும் நேற்று பூரண ஹர்த்தால்

(வன்னி நிருபர்)

வவுனியா மன்னார் மாவட்டங்களிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பண்டாரவளை புனர்வாழ்வு தடுப்பு முகாம் சம்பவத்தை கண்டித்து புளொட்டினால் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள கடைகள், சந்தைகள், மற்றும் தனியார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தது.
- வீதிகளில் எந்தவொரு வாகன சேவைகளும் நடைபெறவில்லை.
- மக்கள் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.
- பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை.
- அரச திணைக்களங்களில் ஊழியர் வரவு குறைவாகவும் பொதுமக்களின் வருகை மிகக் குறைவாகவும் இருந்தமையால் அரச அலுவல்கள் முற்றாக பாதிக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பூந்தோட்டப் பகுதியில் புளொட் அமைப்பின் அங்கத்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல்நிலை மூண்டதால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதில் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை. மேலும் பண்டாரிக் குளம் பகுதியில் நின்றிருந்த புளொட் உறுப்பினர்களை வேறு இயக்க அங்கத்தவர்கள் தாக்கியுள்ளனர். இதேவேளை மன்னார் பகுதியிலும் கடைகள் மூடப்பட்டு, பணிகள் புறக்கணிக்கட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் பகுதியில் புளொட் இயக்கப் பொறுப்பாளர் தமிழ்மாறன் ரமணி ஆகிய இருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்பு விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆரையம்பதி ரெலோ தாக்கி இளைஞர் உயிராபத்தான நிலையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு தெற்கே 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ஆரையம்பதி விசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகில் முகாமிட்டிருக்கும் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த சிலர் ஆரையம்பதி இளைஞர் ஒருவரை ஈவிரக்கமற்ற முறையில் அடித்து அவர் இறந்துவிட்டார் என நினைத்து மணலில் மூடிவிட்டு சென்றபின்னர் அந்த இளைஞர் காப்பாற்றப்பட்டு மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் உயிராபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆரையம்பதியைச்சேர்ந்த தாமோதரம் சுகேந்திரன் (27வயது) என்ற இந்த இளைஞரிடம் தீபாவளி தினத்தன்று மாலை ஆரையம்பதி ரெலோ இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் சிலர் சிகரட் வாங்கிவருமாறு அனுப்பினராம்.

இந்த இளைஞர் தாமதமாக வந்ததால் ஆத்திரம் கொண்ட அவர்கள் தடிகளால் அவரை தலையிலும் உடம்பு எங்கும் அடித்துள்ளனர்.

தலையில் பலமாக அடி விழுந்ததையடுத்து மயக்கமுற்று விழுந்தபோது இறந்துவிட்டார் என நினைத்த ரெலோ இயக்கத்தவர்கள் அவரை இழுத்துச்சென்று மணல் போட்டு மூடிவிட்டு சென்று விட்டனர்.

ஆரையம்பதி ரெலோ பொறுப்பாளரும், கடந்த தேர்தலில் தோல்வியடைந்த பாராளுமன்ற வேட்பாளருமான வரதன் என்பவர் தலைமையிலானவர்களே இத்தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது.

மாலை 6 மணிக்கு மணலில் புதைக்கப்பட்ட இந்த இளைஞரை அவரது நண்பர் ஒருவர் இரவு 11 மணியளவில் தற்செயலாக கண்டு அங்கிருந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தார். கடந்த 4 நாட்களாக மயக்கமான நிலையில் இருக்கும் இவரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கு மட்டக்களப்பு பொதுவைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட ரெலோ பொறுப்பாளர் சாந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது இச்சம்பவத்தை தாம் கண்டிப்பதாகவும், ரெலோவின் அண்மைக்கால செயற்பாட்டிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த அவர் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என தாம் கேட்டிருப்பதாகவும் சொன்னார்.

தாக்குதலுக்கு உள்ளான சுகேந்திரனின் வீட்டிற்கு சென்ற ஆரையம்பதி ரெலோ இயக்க உறுப்பினர்கள் பயமுறுத்தல்களையும் விடுத்துள்ளனர். பொலிஸில் முறைப்பாடு செய்யக்கூடாது என்றும் எச்சரித்ததாக கூறப்படுகிறது.

## எல்லை கிராமங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லையிலுள்ள அனுராதபுரம்-பொலநறுவை மாவட்ட எல்லைக் கிராமங்களில்தான் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பண்டாரவளை புனர்வாழ்வு தடுப்பு முகாம் சம்பவத்தின் எதிரொலியாக அம்மாவட்டங்களிலுள்ள எல்லைப்புறங்களில் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்றும், இதன் காரணமாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்லைப்புற கிராமங்களில் மேலதிக பொலிசாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## எரியும் டயர்களை அகற்ற பிள்ளைக்களை அடித்த படை

(நமது நிருபர் ஜலீல்)

நேற்று நடந்த கடையடைப்பு ஹர்த்தாலின் போது பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில் பிரதான வீதியில் சிலர் டயர்களைப் போட்டு தீவைத்து கொளுத்தியிருந்தனர்.

கல்வி நிலையங்களிலிருந்து மதியம் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த இளம் சிறுவர்களும் இளைஞர்களும் அவ்வீதியில் வந்து கொண்டிருந்தனர். அச்சமயம் அங்கு வந்த விஷேட அதிரடிப்படையினர் எரிந்து கொண்டிருந்த டயர்களையும் எரிந்து சாம்பலாகிக் கிடந்த டயர்களின் எச்சங்களையும் எடுத்து அப்புறப்படுத்துமாறு பாடசாலையிலிருந்து திரும்பிய இளைஞர்களையும் பெண்பிள்ளைகளையும் கேட்டதாகவும் பின்னர் இளைஞர்களை அடித்து அவற்றை அப்புறப்படுத்த செய்ததாகவும் இவற்றை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

ஹர்த்தால் செய்பவர்கள் டயர்களைக் கொளுத்தித்தான் தடைசெய்ய வேண்டுமா ? என்று பிள்ளைகளின் பெற்றோர்கள் வேதனையுடன் கூறிச்சென்றனர்.

### தாக்குதலில் .........

அம்புலன்ஸ் வண்டியை செலுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டுள்ளதோடு மேலும் பொலிஸார் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மலேநிமல் என்ற கான்ஸ்டபிளே பலியானவர்.

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையம் மீது இரவு 8.30 முதல் சுமார் ஒரு மணிநேரம் தாக்குதல் நடாத்தப்பட்டது.

அம்புலன்ஸ் வண்டி சேதமடைந்ததையடுத்து புனாணை இராணுவ வாகன உதவிபெறப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.எம்.பியசேன தெரிவித்தார்.

## கொலைகளை தட்டிக்கேட்க மட்டக்களப்பில் ஒன்று கூடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுதந்திர மனித அபிவிருத்தி கழகம், சகல அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசியல் பிரமுகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் விளையாட்டுக்கழக பிரதி நிதிகள் பொதுமக்கள் ஆகியோர் தற்காலத்தில் இடம்பெறும் கோரத்தனமான தமிழர் மீதான வன்முறைகளை கட்டவிழ்க்கும் பேரினவாத நடைமுறைகளை தட்டிக் கேட்பதற்கும் தமிழர் பிரச்சினைகளை உலகறியச் செய்வதற்குமான ஒன்று கூடல் ஒன்றை நடத்தவுள்ளது.

நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு மட்/கத்தோலிக்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இவ்வமைப்பு வேண்டியுள்ளது.

### மலையாக மக்கள் .....

சபாநாயகரின் அனுமதியை பெறவேண்டும் என்ற நடைமுறை இப்போது கவனத்தில் எடுக்கப்படாது அவசரகால சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்யும் நிலையை தமிழர் விடுதலைக்கூட்டணி வன்மையாக கண்டிப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரனை உடனடியாக விடுதலை 'செய்ய வேண்டும் என்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி கோரியிருப்பதாக ஜோசப் எம்.பி தெரிவித்தார்.

### இளைஞர் கைது

இதேவேளை, நுவரெலியா, தலவாக்கலை பகுதியில் இன்று சிறிலங்கா படையினரும் பொலிசாரும் இணைந்து கிராமங்கள் மற்றும் தோட்டப்பகுதிகளில் பெரும் தேடுதலை நடத்தியுள்ளனர். இத்தேடுதலின்போது பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### ரணில் பார்வையிட்டார்

இதேவேளை நாலாம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்திரசேகரனை எதிர்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும், திலகமாரப்பனை (பா.உ) யும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

### மாந்தீவு .........

முகாம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

எதிர்வரும் 20 ம்திகதியுடன் இவ்வைத்தியசாலை மூடப்படும் என்றும் நோயாளர் அனைவரும் ஹெந்தல வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார்கள் என்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையில் உள்ள தமிழ், முஸ்லீம் நோயாளர்கள் தம்மை ஹெந்தலவுக்கு மாற்றவேண்டாம் என்றும், தொடர்ந்து மாந்தீவு வைத்தியசாலையில் வைத்திருக்குமாறு விடுத்த வேண்டுகோள்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சிங்கள நோயாளர்கள் தம்மை மாற்றுமாறு கோரும் போது உடனடியாக அதை கவனத்தில் எடுக்கும் அரசாங்கம் தமிழ் நோயாளர்கள் தம்மை ஹெந்தலவுக்கு மாற்றுவது பாதுகாப்பில்லை என கோரும் போது அது சிறிதளவேனும் கவனத்தில் எடுக்கப்படவில்லை என தமிழ், முஸ்லீம் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### இராணுவ .........

போது இராணுவ வீரர் ஒருவர் பலியாகியுள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை-மூதூருக்கு தெற்கே சுமார் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிளிவெட்டி பாதைக்கு அண்மையில் அரிப்பு கிராமத்திலேயே இந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

சம்பவத்தின்போது இறந்தவரின் சடலத்தை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றதை தொடர்ந்து நேற்று மாலை ஐ.சி.ஆர்.சி திருகோணமலை மாவட்ட பிரதிநிதிகள் மூலம் மூதூரில் வைத்து இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சேதங்கள் பற்றிய மேலதிக தகவல் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

### குண்டு வெடிப்பு

இதேவேளை மூதூர் சந்தை வீதி, மத்திய வீதிச் சந்தியில், குப்பை மேட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் குண்டு ஒன்று வெடித்துள்ளது. இப்பகுதி சன நடமாட்டம் குறைந்த பகுதியாகையால் எவருக்கும் பாதிப்பேதும் ஏற்படவில்லை